# சமூக நலம் மற்றும்
# சத்துணவுத் திட்டத் துறை

## மானியக் கோரிக்கை எண் – 45

## அறிவிப்புகள்
## 2020–2021

**Dr. V. சரோஜா**

சமூக நலம் மற்றும்
சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர்

# சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

## புதிய அறிவிப்புகள் 2020 – 2021

**1. விழுப்புரம், வேலூர், சேலம், இராமநாதபுரம் மாவட்டங்களில் முதியோர் ஓய்வூதியம் பெறுபவர்களில் உடல் நலம் குன்றிய, ஆதரவற்ற முதியோர்களுக்கு ரூபாய் 2 கோடியே 9 இலட்சம் செலவில் சத்துமாவு வழங்கப்படும்.**

முதியோர் ஓய்வூதியம் பெற்று வரும் முதியோர்களில் உடல் நலம் குன்றிய, ஆதரவற்றவர்களின் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு முன்னோடித் திட்டமாக விழுப்புரம், வேலூர், சேலம், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் முதியோர் ஓய்வூதியம் பெற்று வரும் முதியோர்களில் உடல்நலம் குன்றிய, ஆதரவற்ற சுமார் 9 ஆயிரத்து 94 முதியோர்களுக்கு ஒரு வருட காலத்திற்கு வீட்டிற்கு எடுத்துச் சென்று பயன்படுத்திக் கொள்ளும் வகையில், **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** சத்து மாவு ரூபாய் 2 கோடியே 9 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

## 2. 6,944 அங்கன்வாடி மையங்களில் ரூபாய் 1 கோடியே 67 இலட்சம் செலவில் தீயணைப்பான் கருவிகள் பொருத்தப்படும்.

அங்கன்வாடி மையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளான, பாதுகாக்கப்பட்ட குடிநீர், குழந்தை நேய கழிவறை, மின் வசதி போன்றவைகள் பல்வேறு நடவடிக்கைகள் மூலம் மேம்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது அங்கன்வாடி மைய ஊழியர்கள், குழந்தைகள், உணவுப் பொருட்கள் மற்றும் பதிவேடு போன்றவைகளின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையில் **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** முதற்கட்டமாக அனைத்து மாவட்டங்களிலுள்ள 434 திட்டங்களில் ஒரு திட்டத்திற்கு தலா 16 அங்கன்வாடி மையங்கள் வீதம் 6,944 அங்கன்வாடி மையங்களில் தீயணைப்பான் கருவிகள் ரூபாய் 1 கோடியே 67 இலட்சம் செலவில் பொருத்தப்படும்.

**3. சமூக நலத் துறை தொடர்பான திட்டப் பணிகளை மேற்கொள்வதற்கு சென்னை மாவட்ட சமூகநல அலுவலகம் மத்திய சென்னை, வட சென்னை, தென் சென்னை என மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, மாவட்ட சமூக நல அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உள்ளிட்ட பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும்.**

பெருகி வரும் மக்கள் தொகையினைக் கருத்தில் கொண்டு பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை (தெற்கு), சென்னை (மத்திய) மற்றும் சென்னை (வடக்கு) என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் மூலம் பெண்கள், குழந்தைகள், முதியோர் மற்றும் மூன்றாம் பாலினர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அந்நலத்திட்டங்கள் நல்ல முறையில் பயனாளிகளைச் சென்றடைவதற்கு கூடுதலாக இரண்டு மாவட்ட சமூக நல அலுவலகங்கள் அவசியமாகிறது.

எனவே, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** தற்போதுள்ள சென்னை மாவட்ட சமூக நல அலுவலகத்தை மத்திய சென்னையாக பெயர் மாற்றியும், வட சென்னை, தென் சென்னை என இரண்டு புதிய மாவட்ட சமூக நல அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட்டு, இப்புதிய இரண்டு மாவட்ட சமூக நல அலுவலகங்களுக்கும் மாவட்ட சமூக நல அலுவலர்கள், கண்காணிப்பாளர்கள், உதவியாளர்கள், கணக்கர்கள், தட்டச்சர்கள், ஓட்டுநர்கள், அலுவலக உதவியாளர்கள், விரிவாக்க அலுவலர்கள், நகர் நல அலுவலர்கள், தொகுப்பூதிய அடிப்படையில் பாதுகாப்பு அலுவலர் மற்றும் கணினி இயக்குபவர் என மொத்தம் 46 பணியிடங்கள் புதிதாக தோற்றுவிக்கப்படும். அத்துடன் ஏற்கனவே செயல்பட்டு வரும் சென்னை மாவட்ட சமூக நல அலுவலகம், மத்திய சென்னை என்ற பெயரில் தொடர்ந்து இயங்குவதுடன் அவ்வலுவலகத்திற்கு 5 விரிவாக்க அலுவலர்கள் மற்றும் 10 நகர் நல அலுவலர்கள் ஆகிய பணியிடங்கள் புதிதாக தோற்றுவிக்கப்படும்.

## 4. கடலூர், சிறுவர் மற்றும் சிறுமியருக்கான அரசினர் கூர்நோக்கு இல்லத்தில் முதல் தளம் ரூபாய் 1 கோடியே 15 இலட்சம் செலவில் கட்டப்படும்.

கடலூரில் செயல்பட்டு வரும் சிறுவர் மற்றும் சிறுமியருக்கான அரசினர் கூர்நோக்கு இல்லத்தில் கடலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்ட இளைஞர் நீதிக் குழுமங்களில் விசாரனைக்கு உட்படுத்தப்படும் சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாக கருதப்படும் சிறார்கள் தங்க வைக்கப்படுகின்றனர். இவ்வில்லத்தில் சிறார்களுக்கு உணவு, உடை, உறைவிடம் போன்ற அடிப்படை வசதிகள், உளவியல் ஆலோசனைகள் / ஆற்றுப்படுத்துதல் மற்றும் தொழிற்பயிற்சிகள் உள்ளிட்ட மறுவாழ்வு சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேற்குறிப்பிட்ட சேவைகளை வழங்குவதற்கு போதிய இட வசதி இல்லாத நிலை உள்ளது. மேலும், கடலூர் மாவட்ட இளைஞர் நீதிக் குழுமமும் இக்கட்டடத்திலேயே செயல்பட்டு வருகிறது.

எனவே, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** கடலூரில் தற்போது செயல்பட்டு வரும் சிறுவர் மற்றும் சிறுமியருக்கான அரசினர் கூர்நோக்கு இல்லத்தில் சிறார்களுக்கு தேவையான கூடுதல் இட வசதி ஏற்படுத்தப்படும் பொருட்டு அக்கட்டடத்தில் முதல் தளம் ரூபாய் 1 கோடியே 15 இலட்சம் செலவில் கட்டப்படும்.

**5. தஞ்சாவூரில் உள்ள சிறுவருக்கான அரசினர் குழந்தைகள் இல்ல கட்டடத்தில் முதல் தளம் மற்றும் கூடுதல் கட்டடம் ரூபாய் 2 கோடியே 46 இலட்சம் செலவில் கட்டப்படும்.**

தமிழ்நாடு அரசு சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழ் தஞ்சாவூரில் சிறுவருக்கான அரசினர் குழந்தைகள் இல்லம் செயல்பட்டு வருகின்றது. இவ்வில்லத்தில், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருவாரூர், நாகப்பட்டினம், அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களிலிருந்து பாதுகாப்பும், பராமரிப்பும் தேவைப்படும் 8 முதல் 18 வயதிற்குட்பட்ட சிறார்கள், குழந்தைகள் நல குழுமங்களின் ஆணையின் பேரில் தங்க வைக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றனர். மேலும், பல்வேறு இடர்பாடான சூழ்நிலைகளிலிருந்து மீட்கப்படும், தற்காலிக பராமரிப்பு தேவைப்படும் வரவேற்பு இல்ல சிறார்களும், குழந்தைகள் நல குழும ஆணையின் பேரில் இவ்வில்லத்தில் தங்க வைக்கப்படுகின்றனர்.

தஞ்சாவூரில் தற்போது செயல்பட்டு வரும் சிறுவருக்கான அரசினர் குழந்தைகள் இல்ல கட்டடத்தில் சிறார்களின் பயன்பாட்டிற்கு

2 துயிற்கூடங்கள் மட்டுமே உள்ளன. சிறார்களை வயது வாரியாக தனித்தனி குழுக்களாக பிரித்து தங்கவைக்க வேண்டியது அவசியமாகிறது. மேலும், இவ்வில்லத்தில் தங்கி கல்வி பயிலும் சிறார்களை போதிய இட வசதியுடன் பாதுகாப்பான சூழலில் தங்க வைத்து பராமரித்து அவர்களுக்கு உரிய சேவைகளை தடையில்லாமல் வழங்க இவ்வில்லத்தில் கூடுதல் கட்டட வசதி தேவைப்படுகிறது.

எனவே, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** தஞ்சாவூரில் தற்போது செயல்பட்டு வரும் சிறுவருக்கான அரசினர் குழந்தைகள் இல்ல வளாகத்தில், தற்போதுள்ள இல்ல கட்டடத்தின் முதல் தளமும், தரை தளம் மற்றும் முதல் தளம் கொண்ட கூடுதல் கட்டடமும் ரூபாய் 2 கோடியே 46 இலட்சம் செலவில் கட்டப்படும்.

## 6. சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழ் செயல்படும் 47 குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்களில் வசதிகளை மேம்படுத்த தேவைப்படும் பொருட்கள் கொள்முதல் செய்தல் மற்றும் இல்ல கட்டடங்களில் ரூபாய் 3 கோடி செலவில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளுதல்

பாதுகாப்பும், பராமரிப்பும் தேவைப்படும் குழந்தைகளை தங்க வைத்து பராமரிப்பதற்காக சமூக பாதுகாப்புத்துறையின் கீழ் 36 அரசு குழந்தைகள் இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. இவ்வில்லங்களில் குழந்தைகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள், கல்வி, தொழிற்பயிற்சிகள், விளையாட்டு உள்ளிட்ட குழந்தைகளின் வளர்ச்சிக்கான சேவைகள் வழங்கப்படுகின்றன.

சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்டதாக கருதப்படும் சிறார்கள் பிணையில் விடுவிக்கப்படாத நிகழ்வுகளில், அச்சிறார்களுக்கு தற்காலிக பராமரிப்பு மற்றும் மறுவாழ்வு சேவைகள் அரசினர் கூர்நோக்கு இல்லங்களில் வழங்கப்படுகின்றன. அதற்கென மாநிலம் முழுவதும் 9 கூர்நோக்கு இல்லங்கள் அரசால் நேரடியாக நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும், சட்டத்திற்கு முரணாக செயல்பட்ட சிறார்களை இளைஞர் நீதிக் குழும/குழந்தைகள் நீதிமன்ற ஆணையின் பேரில் தங்க வைத்து மறுசீராக்க சேவைகள் மற்றும் பயிற்சிகள் வழங்குவதற்கு 2 அரசினர் சிறப்பு இல்லங்கள் சமூக பாதுகாப்புத்துறையின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** சமூக பாதுகாப்புத்துறையின் கீழ் அரசால் நடத்தப்படும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள 47 குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் வசதிகளை மேம்படுத்த தேவைப்படும் பொருட்கள் கொள்முதல் செய்து இவ்வில்லங்கள் செயல்படும் கட்டடங்களில் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகள் ரூபாய் 3 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

**7. தஞ்சாவூர், கடலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் உள்ள அங்கன்வாடி மையங்களில் பதிவு செய்துள்ள கர்ப்பிணிப் பெண்களில் இரத்த சோகை குறைபாடுடைய கர்ப்பிணிப் பெண்களுக்கு சிவப்பு அவல், வெல்லம் கலந்த கலவை ரூபாய் 89.81 இலட்சம் செலவில் வழங்கப்படும்.**

பெண்களுக்கு பொதுவாக கர்ப்பகாலத்தில் ஏற்படும் இரத்தசோகையினைக் களைந்து அவர்களுடைய ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்திடும் பொருட்டு முன்னோடித் திட்டமாக **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** கடலூர், தஞ்சாவூர், திருவண்ணாமலை ஆகிய மூன்று மாவட்டங்களில், அங்கன்வாடி மையங்களில் பதிவு செய்துள்ள கர்ப்பிணிப் பெண்களில் இரத்த சோகையுள்ள கர்ப்பிணிப் பெண்களுக்கு, 6 மாத காலத்திற்கு 100 கிராம் அளவிலான சிவப்பு அரிசி அவல், பொரிகடலை மற்றும் வெல்லம் கலந்த கலவை ரூபாய் 89.81 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**8. சேலம், வேலூர், விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள அங்கன்வாடி மையங்களில் பதிவு செய்துள்ள கர்ப்பிணிப் பெண்களில் இரத்த சோகை குறைபாடுடைய கர்ப்பிணிப் பெண்களுக்கு இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பு ரூபாய் 9.40 இலட்சம் செலவில் வழங்கப்படும்.**

பெண்களுக்கு பொதுவாக கர்ப்பக்காலத்தில் ஏற்படும் இரத்தசோகையினை களைந்து அவர்களுடைய ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்திடும் பொருட்டு, முன்னோடித் திட்டமாக **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** சேலம், வேலூர், விழுப்புரம் ஆகிய மூன்று மாவட்டங்களில், அங்கன்வாடி மையங்களில் பதிவு செய்துள்ள கர்ப்பிணிப் பெண்களில் இரத்த சோகை குறைபாடுடைய கர்ப்பிணிப் பெண்களுக்கு, ஒரு வருட காலத்திற்கு வீட்டுக்கு எடுத்து சென்று பயன்படுத்தும் வகையில் இரு முறை செறிவூட்டப்பட்ட உப்பு ரூபாய் 9.40 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**9. திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள துறையூர் வட்டாரம், திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள ஜவ்வாது மலை வட்டாரங்களில் செயல்படும் அங்கன்வாடி மையங்களுக்கு வருகை புரியும் 2 முதல் 5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளின் இரத்தசோகையினை போக்கும் வகையில் கீரை மற்றும் சிறுதானியங்களால் ஆன சூப் ரூபாய் 82.58 இலட்சம் செலவில் வழங்கப்படும்.**

குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து குறைபாடு காரணத்தினால் ஏற்படும் இரத்த சோகை, வயதிற்கேற்ற வளர்ச்சியின்மை போன்றவைகளினால் அவர்களது உடல் நலம் பாதிக்கப்படும் என்பதனைக் கருத்தில் கொண்டு, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி**, திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள துறையூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள ஜவ்வாது மலை ஆகிய இரண்டு பின்தங்கியுள்ள வட்டாரங்களில் செயல்படும் அங்கன்வாடி மையங்களுக்கு வருகை தரும் 2 வயது முதல் 5 வயதுக்குட்பட்ட 5 ஆயிரத்து 455 குழந்தைகளுக்கு ஒரு வருடத்திற்கு கீரை சூப் ரூபாய் 82.58 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

10. தருமபுரி மாவட்டத்திலுள்ள பென்னாகரம் வட்டாரம், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மேலநீலிதநல்லூர் வட்டாரங்களில் செயல்படும் அங்கன்வாடி மையங்களுக்கு வருகை புரியும் 2 முதல் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்தும் வகையில் எள்ளு மிட்டாய் ரூபாய் 75.12 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

இரும்புச்சத்து குறைபாட்டினால் குழந்தைகளிடையே ஏற்படும் இரத்த சோகையினைத் தவிர்த்திடும் பொருட்டு, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** தருமபுரி மாவட்டம் பென்னாகரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் மேலநீலிதநல்லூர் ஆகிய பின்தங்கிய வட்டாரங்களில் செயல்படும் அங்கன்வாடி மையங்களுக்கு வருகை தரும் 2 முதல் 5 வயதிற்குட்பட்ட 6 ஆயிரத்து 260 குழந்தைகளுக்கு இரும்புச்சத்து மிகுந்துள்ள எள்ளு மற்றும் வெல்லம் கலந்த எள்ளு மிட்டாய் முன்னோடித் திட்டமாக ஒரு வருட காலத்திற்கு ரூபாய் 75.12 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**11. சேலம் மாவட்டத்தில் 3 வட்டாரங்களிலும் மற்றும் நாமக்கல் மாவட்டத்தில் 2 வட்டாரங்களிலும் உள்ள 701 அங்கன்வாடி மையங்களுக்கு வருகை புரியும் 3 முதல் 5 வயது வரையுள்ள முன்பருவக் கல்வி பயிலும் 8,393 குழந்தைகளுக்கு முன்னோடித் திட்டமாக சிறு தானிய பிஸ்கட் மாலை நேர சிற்றுண்டியாக ரூபாய் 49.09 இலட்சம் செலவில் வழங்கப்படும்.**

அங்கன்வாடி மையத்திற்கு வருகை தரும் குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்த சத்துமாவு மற்றும் மதிய உணவுடன் முட்டையும் வழங்கப்படுகிறது. அங்கன்வாடி மையத்தில் முன்பருவக் கல்வி பயிலும் 3 முதல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையினை மேலும் மேம்படுத்திடும் பொருட்டு, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** சேலம் மாவட்டத்தில் 3 வட்டாரங்களிலும், நாமக்கல் மாவட்டத்தில் 2 வட்டாரங்களிலும் செயல்படும் 701 அங்கன்வாடி மையங்களுக்கு வருகை தரும் 3 முதல் 5 வயது வரையுள்ள முன்பருவ கல்வி பயிலும் 8,393 குழந்தைகளுக்கு முன்னோடித் திட்டமாக ஒரு வருட காலத்திற்கு சிறு தானிய பிஸ்கட் மாலை நேர சிற்றுண்டியாக ரூபாய் 49.09 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**12. திருச்சிராப்பள்ளி மாவட்டம், வையம்பட்டி வட்டாரத்தில் செயல்படும் அங்கன்வாடி மையங்களில் பயன்பெறும் 2,326 குழந்தைகளுக்கும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், அந்தநல்லூர் வட்டாரத்தைச் சேர்ந்த 15–49 வயதுக்குட்பட்ட 2,153 மகளிருக்கும் சிவப்பு அவல், வெல்லம் கலந்த உருண்டை ரூபாய் 56.83 இலட்சம் செலவில் வழங்கப்படும்.**

இரத்த சோகை என்பது ஒரு ஊட்டச்சத்து குறைபாடாகும். இரத்த சோகை குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு பிறக்கும் குழந்தையும் இதனால் பாதிக்கப்பட்டு, இதன் விளைவாக அக்குழந்தை கற்றல் திறன் குறைபாடுடைய குழந்தையாக வளர நேரிடும். இதனால், வருமானம் ஈட்டும் திறன் குறைவதால், அக்குடும்பத்தினரின் வருமானம் குறைவதுடன், நாட்டின் வளர்ச்சியும் பாதிக்கப்படும். தமிழ்நாட்டில் இரத்த சோகையால் 55.4% மகளிர் மற்றும் 50.7% குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர். தேசிய ஊட்டச்சத்து இயக்கத்தின் கீழ் ஒரு வருடத்திற்கு 3 சதவீதம் இரத்த சோகையை குறைத்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனால் தமிழ்நாடு

அரசால் வரும் நிதியாண்டில் முன்னோடித் திட்டமாக **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், முதற்கட்டமாக வையம்பட்டி வட்டாரத்தைச் சேர்ந்த அங்கன்வாடி மையங்களில் பயன்பெறும் **2,326** குழந்தைகளுக்கும், அந்தநல்லூர் வட்டாரத்தைச் சேர்ந்த **15–49** வயதிற்குட்பட்ட **2,153** மகளிருக்கும், பயனாளி ஒருவருக்கு **100** கிராம் அளவிலான சிவப்பு அவல், வெல்லம் கலந்த உருண்டை **6** மாத காலத்திற்கு ரூபாய் **56.83** இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**13. 1,471 அங்கன்வாடி மையங்களுக்கு எரிவாயு இணைப்பு, எரிவாயு அடுப்பு, பிரஷர் குக்கர் வழங்கியும், சமையல் மேடை அமைத்தும் ரூபாய் 1 கோடியே 29 இலட்சம் செலவில் நவீனப்படுத்தப்படும்.**

அங்கன்வாடி மையங்களில் புகையில்லா சூழ்நிலையினை உருவாக்கி சுற்றுப்புறத்தினை மேம்படுத்திடும் வகையில், எரிவாயு அடுப்பு மற்றும் பிரஷர் குக்கர் வழங்கியும், சமையல் மேடை அமைத்தும் இது நாள் வரையில் **52,963** அங்கன்வாடி மையங்கள் பல்வேறு கட்டங்களாக நவீனப்படுத்தப்பட்டுள்ளன. **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** தற்போது எஞ்சியுள்ள மாவட்டங்களில் 1,471 அங்கன்வாடி மையங்கள் ரூபாய் 1 கோடியே 29 இலட்சம் செலவில் நவீனப்படுத்தப்படும்.

**14. அங்கன்வாடி மையங்களில் பயன்பெறும் 2 வயதிற்குட்பட்ட இளம் சிறார், குழந்தைகளைப் பேணுவோருக்கு உணவூட்டும் முறைகள் குறித்த சுயமதிப்பீட்டுத் தாள்கள் ரூபாய் 1 கோடியே 61 இலட்சம் செலவில் வழங்கப்படும்.**

தமிழ்நாட்டில், முதற்கட்டமாக சென்னை, விழுப்புரம், நீலகிரி, திண்டுக்கல், அரியலூர் மாவட்டங்களில் அங்கன்வாடி மையங்களில் பயன்பெறும் 2 வயதிற்குட்பட்ட இளம் சிறார் மற்றும் குழந்தைகளின் உணவூட்டும் முறைகளை மேம்படுத்தி ஊட்டச்சத்துக் குறைப்பாட்டினைக் குறைப்பதற்கு **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி**, பெற்றோர் மற்றும் குழந்தைகளைப் பேணுவோருக்கு உணவூட்டும் முறைகள் குறித்த சுயமதிப்பீட்டுத் தாள்கள் ரூபாய் 1 கோடியே 61 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

இத்தகைய சுய மதிப்பீட்டுத் தாள்கள் வழங்குதல் மூலம் 2 வயதிற்குட்பட்ட இளம் சிறார்கள் மற்றும் குழந்தைகளுக்கு சத்தான மற்றும் சரிவிகித உணவினை பெற்றோர்/பாதுகாவலர் ஆகியோர் வழங்குவதை உறுதி செய்யப்பட்டு, ஊட்டச்சத்து குறைபாட்டினை தடுக்க இயலும்.

**15. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் துறையின் அலுவலர்கள் அடங்கிய குழுக்கள் தேசிய ஊட்டச்சத்து இயக்கத்தினைச் சிறந்த முறையில் செயல்படுத்திடும் தமிழக மாவட்டங்கள் மற்றும் அண்டை மாநிலங்களுக்கு களப் பயணம் மேற்கொள்ளப்படும்.**

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** தமிழ்நாட்டில் முதற்கட்டமாக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட துறையின் அலுவலர்கள் அடங்கிய குழுக்கள் இத்திட்டத்தினைச் சிறந்த முறையில் செயல்படுத்தி வரும் தமிழ்நாட்டின் மூன்று மாவட்டங்கள் மற்றும் இந்தியாவில் உள்ள மூன்று மாநிலங்களுக்கு ரூபாய் 32.70 இலட்சம் செலவில் புதுமைகளைக் கற்பதற்கும் மற்றும் பகிர்ந்து கொள்ளும் பொருட்டும் களப் பயணம் மேற்கொள்ளப்படும். மற்ற மாநிலங்களிலும், மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும் சிறந்த களப்பணிகளை நேரடியாக பார்வையிட்டு, கற்றுக் கொள்வதன் மூலம் தங்கள் பகுதிகளில் தேசிய ஊட்டச்சத்து இயக்க செயல்பாடுகளை உரிய முறையில் கண்காணித்து, சிறப்புற செயல்படுத்தி, நிர்ணயித்த இலக்குகளை அடைய வழிவகை செய்ய உதவும்.

**16\. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள், மாவட்ட மற்றும் வட்டார உதவி மைய பணியாளர்களுக்கு அங்கன்வாடி மைய திறன்பேசிகளில் பயன்படுத்தப்படும் பொதுவான மென்பொருள் செயல்பாடு செயலியின் டேஷ்போர்டு கையாள புத்தாக்கப் பயிற்சி வழங்கப்படும்.**

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட மற்றும் வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்கள் மற்றும் தேசிய ஊட்டச்சத்து இயக்க திட்ட உதவி மைய பணியாளர்கள் **934** பேருக்கு, **16** பிரிவுகளில் ரூபாய் **17.61** இலட்சம் செலவில், டேஷ்போர்டு கையாளும் புத்தாக்கப் பயிற்சி வழங்கப்படும்.

டேஷ்போர்டின் பயன்பாடு ஒவ்வொரு காலகட்டத்திற்கும், தேவைக்கு ஏற்ப புதுப்பிக்கப்படுகிறது. அவ்வாறு புதுப்பிக்கப்பட்ட டேஷ்போர்டின் பயன்பாட்டினை அறிந்துகொள்ள புத்தாக்கப் பயிற்சி தேவைப்படுகிறது. இதனால்

மாவட்ட மற்றும் வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்கள் மற்றும் தேசிய ஊட்டச்சத்து இயக்க திட்ட உதவி மைய பணியாளர் அனைவருக்கும் நிகழ் நேர கண்காணிப்பிற்காக (Real Time Monitoring) டேஷ்போர்டு கையாளும் புத்தாக்கப் பயிற்சி வழங்கப்படும். இதன் மூலம் களப்பணியாளர்களின் பணித் திறன் மேம்பட வழி வகை செய்யப்படும்.

**17. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் தேசிய ஊட்டச்சத்து இயக்கம் குறித்து, ஊடகத் துறையினருக்கு கருத்துப் பட்டறைகள் நடத்தப்படும்.**

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** தமிழ்நாட்டில், முதற்கட்டமாக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தில் செயல்படுத்தப்படும் தேசிய ஊட்டச்சத்து இயக்கம் (போஷன் அபியான்) குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி பரப்புரை மேற்கொள்ள ஏதுவாக ஊடகத் துறையினருக்கு மூன்று கருத்துப் பட்டறைகள் ரூபாய் **2.41** இலட்சம் செலவில் நடத்தப்படும்.

இக்கருத்துப் பட்டறைகளின் மூலம் ஊடகத் துறையினருக்கு தேசிய ஊட்டச்சத்து இயக்க செயல்பாடுகள் குறித்த விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல் மூலம், மாநிலத்தில் அனைத்து பகுதிகளில் உள்ள பயனாளிகளை திட்ட நோக்கம் மற்றும் பயன்கள் எளிதில் சென்றடைய வழிவகை செய்யும்.

**18. சமூக நல திட்டத் துறையின் கீழ் உள்ள அலுவலர்களின் பணியைக் கண்காணிப்பதற்கு பொதுவான பயன்பாட்டுக் குழு (Closed User Group) உருவாக்கப்படும்.**

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறையின் பணிகள் கிராம அளவில் செயல்படுத்தப்படுகின்றது. கிராமம் மற்றும் வட்டார அளவில் நடைபெறும் திட்டப்பணிகளை மாவட்ட அளவில் துரிதமாக கண்காணிக்கவும் மேலும் திட்டச் செயல்பாடுகளை திறம்பட உடனுக்குடன் பரிமாறவும், அலுவலர்களின் பணியை மேம்படுத்தவும், 3 இயக்கக அலுவலர்கள், மாவட்ட அலுவலர்கள் மற்றும் பிற அலுவலர்களுக்கு பொதுவான பயன்பாட்டுக்குழு (Closed User Group) **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** அமைக்கப்படும்.

## 19. குழந்தைத் திருமணங்களை தடுப்பதற்கு 10 வட்டாரங்களில் சிறப்பு விழிப்புணர்வு இயக்கம் நடத்தப்படும்.

இளவயது கர்ப்பம் / குழந்தைத் திருமணங்கள், மனித உரிமை மீறலாக கருதப்படுவதுடன், அதனால் சமூகத்தில் தாய்/ சேய் நல பராமரிப்புப் பணியில் ஏற்படும் பாதிப்புகளும் அதிகமாக உள்ளன.

குழந்தைத் திருமணம் மற்றும் இளவயது கர்ப்பம் அதிகமாக பதிவாகும் மாவட்டங்கள், சிறப்பு திட்டமான பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் மூலம் நிதி ஒதுக்கீடு அளிக்கப்படாத மாவட்டங்கள் மற்றும் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி திட்டம் மூலம் மிகவும் பின்தங்கிய வட்டாரங்களாக கண்டறியப்பட்ட இனங்களில் 10 வட்டாரங்களை தேர்வு செய்து, குழந்தைத் திருமணங்களை தடுக்கும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்படி, திண்டுக்கல் மாவட்டத்தில் சாணார்பட்டி, ரெட்டியார்சத்திரம், வடமதுரை, தொப்பம்பட்டி ஆகிய நான்கு வட்டாரங்களும், மதுரை மாவட்டத்தில்

வாடிப்பட்டி மற்றும் டி.கல்லுப்பட்டி ஆகிய இரண்டு வட்டாரங்களும், தூத்துக்குடி மாவட்டத்தில் கயத்தாறு மற்றும் கோவில்பட்டி ஆகிய இரண்டு வட்டாரங்களும், திருநெல்வேலி மாவட்டத்தில் குருவிக்குளம் மற்றும் மேலநீலிதநல்லூர் ஆகிய இரண்டு வட்டாரங்களும் தேர்வு செய்யப்பட்டு உள்ளன. **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி**, தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த 10 வட்டாரங்களில் குழந்தைத் திருமணங்களை தடுத்தல் குறித்து போதிய விழிப்புணர்வை ஏற்படுத்திடவும், தாய்சேய் நலப் பணியில் பின்தங்கிய நிலையை மேம்படுத்திடவும், ஆண்டு ஒன்றிற்கு ரூபாய் 50 இலட்சம் வீதம் 3 ஆண்டுகளில் ரூபாய் 150 இலட்சம் செலவில் சிறப்பு விழிப்புணர்வு இயக்கம் நடத்தப்படும்.

## 20. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் 100 சத்துணவு மையங்களில் சமூகத் தணிக்கை மேற்கொள்ளப்படும்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்ட செயல்பாட்டின் வெளிப்படையான முறையினை பொதுமக்கள் தெரிந்து கொள்ளவும், திட்டம் செயல்படுத்துவதில் ஒவ்வொரு அலுவலருக்கும் கொடுக்கப்பட்டுள்ள பணி மற்றும் அவர்களது கடமைகள் குறித்து தெளிவாக எடுத்துரைக்கவும் சத்துணவு மையங்களில் சமூகத் தணிக்கை மேற்கொள்ளப்படவேண்டியது அவசியமாகிறது. சமூக தணிக்கையில் குழந்தைகளுக்கு உரிய நேரத்தில் உணவு வழங்குவது, உணவின் தரம் மற்றும் அளவு சரிபார்ப்பது, சத்துணவு மையங்களின் உட்கட்டமைப்பு வசதி, குழந்தைகளது வருகைப் பதிவேடு, பணப்பட்டுவாடா, உணவுப் பொருட்களின் இருப்புப் பதிவேடு, திட்டத்தின் செயலாக்கம் தொடர்பான நிறை குறைகள் ஆகியவை சமூகத் தணிக்கையில் எடுத்துக் கொள்ளப்படவேண்டும். சமூகத் தணிக்கையானது

மாவட்டங்களில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள சமூகத் தணிக்கை அமைப்பின் மூலம் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி**, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் செயல்படும் சமூகத் தணிக்கை சங்கத்தினைக் (Social Audit Society of Tamil Nadu) கொண்டு முதற்கட்டமாக, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின் 100 சத்துணவு மையங்களில் ரூபாய் 25.20 இலட்சம் செலவில் 2020–2021–ஆம் நிதியாண்டில் சமூகத் தணிக்கை மேற்கொள்ளப்படும்.

**21. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சத்துணவு மையப் பணிகளை மேற்கொள்வதற்கென தனியாக அலுவலர் உள்ளிட்ட பணியாளர்கள் நியமனம் செய்யப்படும்.**

குழந்தைகள் தேசத்தின் எதிர்காலம் என்ற அடிப்படையிலும் பின்தங்கிய சூழ்நிலையில் வளர்ந்து வரும் குழந்தைகள் அறிவாற்றலுடன் நாட்டின் சிறந்த குடிமக்களாக வளர்ந்திட வழிவகுத்திட வேண்டும் என்று உணர்ந்ததாலும், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்களால் "முதலமைச்சர் சத்துணவுத் திட்டம்" 1.7.1982 முதல் அறிமுகப்படுத்தி செயல்படுத்தப்பட்டது. 1991 முதல் இத்திட்டம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் துவக்கியதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. குழந்தைகளது கல்வி மேம்பாடடைவதற்கு பசி ஒரு தடையாக இருக்கக்

கூடாது என்பது தான் இத்திட்டத்தின் உயரிய நோக்கம் ஆகும். தமிழ்நாட்டில் மொத்தம் 43,283 சத்துணவு மையங்களும் இதில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 606 சத்துணவு மையங்களும் செயல்பட்டு வருகின்றன. **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி**, இம்மையங்களின் செயல்பாடுகளைக் கண்காணிக்கவும், சத்துணவுப் பணியாளர்களது பணி நியமனம், பணிமாறுதல், ஊதியம், மாதாந்திர சிறப்பு ஓய்வூதியம், ஒட்டுமொத்தத் தொகை பெற்று வழங்குவது, சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடை திட்டம் ஆகியவை பெற்று வழங்குவது மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் சத்துணவு மையங்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்களுக்கான பணப்பட்டுவாடா ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கென மாவட்ட ஆட்சியரின் ஒரு நேர்முக உதவியாளர் (சத்துணவுத் திட்டம்), ஒரு உதவிக் கணக்கு

அலுவலர், ஒரு உதவியாளர், ஒரு இளநிலை உதவியாளர், ஒரு தட்டச்சர், ஒரு ஈப்பு ஓட்டுநர், ஒரு அலுவலக உதவியாளர் என 7 பணியிடங்கள் ஆண்டு செலவினம் ரூபாய் **69.40** இலட்சம் செலவில் புதிதாக தோற்றுவிக்கப்படும்.

**22. தமிழ்நாட்டில் இராணிப்பேட்டை, திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் பல்நோக்கு ஆதார வள மையங்கள் அமைக்கப்படும்.**

இடர்பாடான சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகள் மற்றும் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளான குழந்தைகளை குழந்தை நேய அணுகுமுறையுடன், குழந்தை நேயச் சூழலில் விசாரணை செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது.

இதற்காக, சென்னையில் சிறுமியருக்கான அரசினர் குழந்தைகள் இல்ல வளாகத்தில் பல்நோக்கு ஆதார வள மையம் ஒன்றை தன்னார்வ தொண்டு நிறுவனத்துடன் இணைந்து அரசு நிறுவியுள்ளது.

இதுபோன்று, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி**, தமிழகத்தில் இராணிப்பேட்டை, திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஆகிய 4 மாவட்டங்களில் பல்நோக்கு ஆதார வள மையங்கள் அமைக்கப்படும்.

**23. தமிழ்நாட்டில் நாமக்கல் மற்றும் மதுரை மாவட்டங்களில் குழந்தைகளுக்கான பிரத்யேக போதைத் தடுப்பு மையங்கள் கூடுதலாக அமைக்கப்படும்.**

இளைஞர் நீதி (குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) சட்டம்,2015–ன் கீழ் தவறிழைத்தாக கருதப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படும் குழந்தைகளில் பலர் குடி மற்றும் போதை பழக்கத்திற்கு ஆளாகி இருப்பதும், பெரும்பாலான குழந்தைகள் போதை பழக்கத்தின் ஆளுமையில் குற்ற செயல்களில் ஈடுபடுவதும் காணப்படுகிறது.

இச்சிறார்களுக்கு உரிய சிகிச்சையும் ஆலோசனையும் வழங்கி அவர்களின் மறுவாழ்விற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள குழந்தைகளுக்கான பிரத்தியேக போதைத் தடுப்பு மையம் ஒன்று செங்கல்பட்டு மாவட்டத்தில் அரசால் ஏற்படுத்தப்பட்டு, அம்மையம் தற்போது தன்னார்வத் தொண்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போது தென் மாவட்டங்களில் உள்ள குழந்தைகளும் செங்கல்பட்டு மாவட்டத்திற்கு வந்து சிகிச்சை பெற்று செல்லவேண்டிய சூழ்நிலை உள்ளது. மேலும் இக்குழந்தைகளுடன் அவர்களது பெற்றோர்களும் உடன் இருக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது.

எனவே, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி**, மதுரை, நாமக்கல் மாவட்டங்களில் குழந்தைகளுக்கான பிரத்யேக போதைத் தடுப்பு மையங்கள் கூடுதலாக அமைக்கப்படும்.

**24. சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழ் செயல்படும் 36 அரசுக் குழந்தைகள் இல்லங்களில் தங்கியுள்ள குழந்தைகளுக்கு ஆற்றுப்படுத்துதல் (Counselling) சேவைகள் வழங்கப்படும்.**

இளைஞர் நீதிச் சட்டம், **2015**–ன் படி, பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளை தங்க வைத்து பராமரிப்பதற்கு தமிழகத்தில் **36** குழந்தைகள் இல்லங்கள் சமூக பாதுகாப்புத் துறையின் கீழ் அரசால் நடத்தப்பட்டு வருகிறது.

இவ்வில்லங்களில் வீடு அல்லது தங்குமிடம் இல்லாத, வளர்க்க / பராமரிக்க எவரும் இல்லாத குழந்தைகள், பல்வேறு இடர்பாடான சூழ்நிலைகளிலிருந்து மீட்கப்பட்ட குழந்தைகள், குடும்ப, சமூக சூழல் சரியில்லாத குழந்தைகள் ஆகியோர் தங்க வைத்து பராமரிக்கப்படுகின்றனர். அரசுக் குழந்தைகள் இல்லங்களில் அவர்களுக்கு உணவு, உடை, உறைவிடம் போன்ற அடிப்படை வசதிகள், கல்வி மற்றும் மருத்துவ உதவிகள் வழங்கப்படுகின்றன.

இக்குழந்தைகள் அவர்களின் சமூக பின்னனியின் காரணமாக பல்வேறு உளவியல் பிரச்சினைகளை எதிர் கொள்ள வேண்டியுள்ளது. அவர்களுக்கு ஏற்படும் உளவியல் பிரச்சினைகளை ஆற்றுப்படுத்துதல் மூலம் களைந்து, அவர்கள் கல்வி மற்றும் பிற ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளில் முனைப்புடன் ஈடுபட்டு இயல்பான வளர்ச்சியை பெற உதவி செய்யவும், அவர்களை சமூகத்துடன் ஒருங்கிணைக்கவும் ஆற்றுப்படுத்துதல் சேவை வழங்குவது பெருமளவில் பயனுள்ளதாக இருக்கும்.

எனவே, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி**, ஆற்றுப்படுத்துநர் மற்றும் உளவியல் வல்லுநர்களைக் கொண்டு தமிழகத்தில் செயல்பட்டு வரும் **36** அரசுக் குழந்தைகள் இல்லங்களில் தங்கியிருக்கும் தேவையுள்ள குழந்தைகளுக்கு இரு தினங்களுக்கு ஒருமுறை என ஆண்டு முழுவதும் ஆற்றுப்படுத்துதல் சேவை வழங்கப்படும்.

## 25. மூன்றாம் பாலினரை உறுப்பினர்களாகக் கொண்ட "மூன்றாம் பாலினர் தையல் தொழிற்கூட்டுறவுச் சங்கம்" உருவாக்கப்படும்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** சென்னை மாவட்டத்தில் மூன்றாம் பாலினரின் வாழ்க்கை தரத்தை உயர்த்தவும், பொருளாதார முன்னேற்றத்தை உறுதிப்படுத்தும் வகையில் மூன்றாம் பாலின உறுப்பினர்கள் கொண்ட "மூன்றாம் பாலினர் தையல் தொழிற்கூட்டுறவுச் சங்கம்" ரூபாய் 17.50 இலட்சம் செலவில் உருவாக்கப்படும். இச்சங்கம் கூட்டுறவு சங்க விதிகளின்படி பதிவு செய்யப்படும். இதன் மூலம் மூன்றாம் பாலினருக்கு தையல் தொழிற்பயிற்சி அளிக்கப்படும். விலையில்லா சீருடை திட்டத்தில் சீருடை தைத்து வழங்கும் பணியினை மற்ற தையல் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்குவது போன்று மூன்றாம் பாலினருக்கும் வழங்கி, அவர்கள் நிரந்தர வருமானம் பெறுவதற்கு வழிவகை செய்யப்படும்.

**Dr. V. சரோஜா**

**சமூக நலம் மற்றும்**
**சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர்**